இன்றைய வேளாண் செய்திகள்

## இந்தியாவில் வேளாண் ஆய்வு மையம்: இஸ்ரேல் அறிவிப்பு

இந்தியாவில் வேளாண் துறையில் ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்தவும், பால் வளத் துறையை மேம்படுத்தவும், விவசாயிகளுக்கான சிறப்பு ஆய்வு மையங்களை இஸ்ரேல் தொடங்க உள்ளதாக அந்நாட்டின் வேளாண் அமைச்சர் யாயிர் ஷமீர் தெரிவித்தார். "எழுச்சிமிகு குஜராத்' மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, குஜராத் மாநிலம், காந்திநகருக்கு வந்திருந்த அவர், செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு கூறினார். இதுதொடர்பாக, அவர் மேலும் கூறியதாவது: இந்தியாவில் ஹரியாணா, மகாராஷ்டிரம், பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், பிகார், மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் இந்த சிறப்பு மையங்கள் அமைக்கப்படும். இந்தியாவில் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்துமாறு, பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக் கொண்டதையடுத்து, இந்தச் சிறப்பு ஆய்வு மையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று இஸ்ரேல் அமைச்சர் கூறினார்.

## கோயம்பேட்டில் குவிந்த கரும்புகள்!



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, சென்னை கோயம்பேடு சந்தையில் கரும்பு, வாழைகள் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளன. தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை வருகிற 15-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகையில் முக்கியப் பங்கு வகிக்கும் சுவைமிகு கரும்புகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து, கோயம்பேடு மார்க்கெட்டுக்குக் கொண்டு வரப்பட்டு பெரும்பாலும் மொத்த விலையில் விற்பனை செய்யப்படுவது

வழக்கம். இதுகுறித்து பண்ருட்டியைச் சேர்ந்த கரும்பு வியாபாரி விஸ்வநாதன் ஞாயிற்றுக்கிழமை கூறியது: கடந்த ஆண்டைப் போல கடலூர், நாமக்கல், சேலம், பண்ருட்டி, மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து கரும்புகள் அதிக அளவில் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. கடந்த வியாழக்கிழமை 5-க்கும் குறைவான லாரிகளில் கொண்டு வரப்பட்ட கரும்புகள், பண்டிகை நெருங்குவதையொட்டி தற்போது 30 முதல் 45 லாரிகளில் கொண்டு வரப்படுகின்றன. ஒரு லாரிக்கு 275 கட்டுகள் கரும்புகள் ஏற்றப்படும். ஒரு கட்டில் 15 முதல் 20 கரும்புகள் இருக்கும். கரும்பின் வகை, தரத்தைப் பொருத்து ஒரு கட்டு ரூ.250 முதல் ரூ.400 வரை விற்கப்படுகின்றன. பொங்கல் பண்டிகைக்கு கடைசி இரு நாள்களில் விற்பனை அதிகரிக்கும். அதற்கேற்ப கூடுதல் கரும்புகளை விற்பனைக்கு கொண்டுவர முடிவு செய்துள்ளோம் என்றார்.

## <u>பொன்னேரியில் நீர் சேகரிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரிக்கை</u>

பொன்னேரியில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் வகையில் அங்குள்ள கட்டடங்களில் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி பேரூராட்சியில் 18 வார்டுகள் அமைந்துள்ளன. இதில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்பு வீடுகள், 1000-க்கும் மேற்பட்ட வணிக நிறுவனங்கள் அமைந்துள்ளன. அத்துடன் பொன்னேரியில் கோட்டாட்சியர், வட்டாட்சியர், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, அரசு கருவூலம் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்கள் அமைந்துள்ளன. நிலத்தடி நீரை சேமிக்கும் குளங்கள்... பொன்னேரி நகரில் நிலத்தடி நீரை சேமிக்கும் வகையில் அகத்தீஸ்வரர், கரிகிருஷ்ணப் பெருமாள், நூற்றி எட்டீஸ்வரர் உள்ளிட்ட கோயில்களில் குளங்கள் அமைந்துள்ளன. இதில் அகத்தீஸ்வர் ஆலய கோயில் குளம் இதுவரை வற்றாதக் குளமாக இருந்து

வருகிறது. பொன்னேரி பேரூராட்சியில் திறந்தவெளிப் பகுதிகள் குறைந்து போனதால் மழை நீர் பூமிக்குள் செல்வது குறைந்து வருகிறது. இதன் காரணமாக பொன்னேரியைச் சுற்றி உள்ள ஒரு சில பகுதிகளில் நிலத்தடி நீரின் தன்மை மெல்ல மாறி வருகிறது. இதனால் இந்தப் பகுதியில் மழை நீர் சேகரிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றால், இந்தப் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து எதிர்வரும் காலங்களில் குடிநீர் உவர்ப்புத் தன்மை கொண்டதாக மாறும் நிலை ஏற்படும். எனவே பொன்னேரி பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் இருக்கும் வகையில் பொன்னேரி பேரூராட்சி எல்லைகுள்பட்டு அமைந்துள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், வீடுகளில் மழை நீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைக்க பேரூராட்சி நிர்வாகம் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சுற்றுச்சூழல் நல ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம் திறப்பு

பெரியநாயக்கன்பாளையத்தில் புனரமைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டடத்தின் திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு, வங்கியின் தலைவர் கே.குருந்தாசலம் தலைமை வகித்தார். பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சித் தலைவர் பி.ஆர்.ஜி.அருண்குமார் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். முன்னதாக கணபதி ஹோமம் நடைபெற்றது.துணைத் தலைவர் சந்திரன், காய்கறி விற்பனை கூட்டுறவு சங்கத் தலைவர் ரகுநாதன், பேரூராட்சித் தலைவர்கள் ஆனந்தன், கே.வி. என்.ஜெயராமன், வங்கி இயக்குநர்கள் ரங்கநாதன், கவுன்சிலர்கள் சுப்பிரமணியம், மனோகரன், குணா, ராமமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சிறு தானிய உற்பத்தியில் தமிழகம் முதலிடம்

சிறு தானிய உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது என்று தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ண மூர்த்தி பேசினார். தமிழ்நாடு வேளாண்மை தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின்

முப்பெரும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு, சங்கத்தின் மாநிலத் தலைவர் துரை.சந்திரசேகரன் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் ப.சேகர் வரவேற்றார். தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசுகையில், ரூ.1 லட்சம் கோடிக்கு மேல் பட்ஜெட் தாக்கல் செய்யும் மாநிலமாக தமிழகத்தை ஜெயலலிதா தரம் உயர்த்தி உள்ளார். 2013-14-ம் ஆண்டில் தமிழகத்தில் 1.42 லட்சம் கோடியிலும், 2014-15-ம் ஆண்டில் 1.48 லட்சம் கோடியிலும் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இப்படியாக, இந்தியாவிலேயே 1 லட்சம் கோடிக்கு மேல் பட்ஜெட் தாக்கல் செய்யும் சில மாநிலங்களில் தமிழகத்தையும் ஜெயலலிதா தரம் உயர்த்தி இருக்கிறார். 2011-12 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் பிடித்து மத்திய அரசிடம் இருந்து விருது பெற்றது. சிறு தானிய உற்பத்தியிலும் இந்தியாவிலேயே தமிழகம் தொடர்ந்து முதலிடம் பிடித்து வருகிறது என்றார். முன்னதாக, சங்கத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான தொழில்நுட்பக் கையேட்டை அமைச்சர் அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டார். இவ் விழாவில், உதவி வேளாண்மை அலுவலராக 10 ஆண்டு பணிபுரிந்தவர்களுக்கு துணை வேளாண்மை அலுவலராக பதவி உயர்வு அளிக்க வேண்டும். உதவி வேளாண்மை அலுவலர் என்ற பதவியை வேளாண்மை தொழில்நுட்ப அலுவலர் என்று பெயர் மாற்ற வேண்டும். 10 ஆண்டுகள் பணி முடித்த துணை வேளாண்மை அலுவலர்களுக்கு வேளாண்மை உதவி இயக்குநருக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில், எம்எல்ஏக்கள் ஏ.கே.அரங்கநாதன், டி.சுரேஷ்குமார், தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் வேட்டவலம் கே.மணிகண்டன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எம்.எஸ்.நைனாக் கண்ணு, தமிழ்நாடு வேளாண்மை தொழில்நுட்ப அலுவலர் சங்க மாநில செயலாளர் ப.சேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**"நெற்பயிர்களைத் தாக்கியுள்ள கூண்டுப் புழுக்களை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்**

தாமிரவருணி பாசனப் பகுதியில் நெற்பயிர்களைத் தாக்கியுள்ள கூண்டுப் புழுக்களை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி பூச்சியியல் துறைப் பேராசிரியரும், தலைவருமான கோ.ரவி, ஆராய்ச்சியாளர்கள் வி.ஞா.பிரகாஷ், க. ராஜேஷ் குமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தாமிரவருணி பாசனப் பகுதியில் இப்போது நெற்பயிர்கள் அதிகம் பயிரிடப்பட்டுள்ளன. இந்த நெற்பயிர்களில் கூண்டுப்புழு பரவலாக காணப்படுகிறது. இப்புழுக்கள் இலைகளில் உள்ள பச்சையத்தை சுரண்டி உண்ணுவதால் இலைகள் வெள்ளை நிறக் காகிதம்போல் காணப்படும். இலைகள் வெட்டப்பட்டு சிறு,சிறு குழாய் வடிவ கூண்டுகள் தூர்களைச் சுற்றிக் காணப்படும். மேலும், இலைகள் கத்தரிக்கோல் கொண்டு சரியான கோணத்தில் வெட்டப்பட்டதுபோல் காணப்படும். இப்புழுக்களைக் கட்டுப்படுத்த பயிரின் குறுக்கே கயிறைப் போட்டு இழுப்பதன் மூலம் தூர்களில் இருக்கும் புழுக்கள் நீரில் விழும். அவ்வாறு விழுந்தவுடன் வயலில் இருந்து வெளிவரும் நீரை வடிகாலின் வழியாக சாக்குப்பை கொண்டு வடிகட்ட வேண்டும். இவ்வாறு வடிகட்டுவதன் மூலம் நீரில் மிதந்து வரும் கூண்டுப்புழுக்களை சாக்குப்பையில் சேகரித்து அழித்து விட வேண்டும். இதேபோல் வயலினுள் வரும் நீரையும் மேற்கண்டவாறு சாக்குப் பை கொண்டு வடிகட்டிய பின்னரே தண்ணீர் வயலின் உள்ளே வர விட வேண்டும். மேலும், இவ்வகை பூச்சிகளுக்கு செயற்கை பைரித்திராய்டு வகையைச் சார்ந்த மருந்துகளை தெளிப்பதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் இவை அனைத்தும் முதலில் பூச்சிகளை நன்கு கட்டுப்படுத்தும். அதனால் சாறு உறிஞ்சும் பூச்சிகளான புகையான், பச்சை தத்துப் பூச்சி, நெல் சிலந்தி போன்ற பூச்சிகளின் மறுஉற்பத்தித் திறன் அதிகரிக்கும். எனவே ஒரு ஏக்கருக்கு கார்பரில் 10 சதவீத தூளை 10 கிலோ என்ற அளவில் தூவ வேண்டும். அல்லது பென்தோயேட் 50 இசி மருந்தை 400 மி.லி. என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீருடன் கலந்து அதனுடன் 100 மி.லி.

ஒட்டும் திரவம் கலந்து கைத் தெளிப்பானைக் கொண்டு பயிரில் நன்கு படும்படி காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும். மேலும், விவரங்களுக்கு அருகில் உள்ள வேளாண்மை அலுவலகத்தையோ அல்லது கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியின் பூச்சியியல் துறையையோ அணுக வேண்டும் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நெற்பயிரில் புகையானை கட்டுப்படுத்த யோசனை**

தஞ்சாவூர்: நெற்பயிரில் காணப்படும் புகையான் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, தஞ்சை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் வெளியிட்ட அறிக்கை: சம்பா, தாளடி பருவத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள், தற்போது கதிர் வரும் நிலையில் உள்ளது. இப்பயிர்களில் ஆங்காங்கே புகையான் பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. தாய் பூச்சிகளும், இதன் அந்து பூச்சிகளும், கூட்டமாக தூர்களின் அடிகளில் தங்கி, சாற்றை உறிஞ்சி வாழும். இதனால் பயிரின் உணவு பாதை தடைப்பட்டு, தூர்கள் வாடி, காய்ந்து விடும். பயிரின் மேற்பரப்பில், எந்தவிதமான பூச்சிகளும் தென்படாது. பயிரின் தூர்களை தட்டினால், வளர்ச்சி பெற்ற பூச்சிகள் தாவி, அடுத்த தூருக்கும், குஞ்சுகள் தண்ணீரில் விழுந்து, மறுபடியும் பயிரில் ஏறுவதும், கவனத்துடன் பார்த்தால் தெரியும். அதிக தழைச்சத்து உள்ள பயிர்கள், அடர்த்தி நிறைந்த பயிர்கள், நீர் அதிகம் தேங்கியுள்ள வயல்களில் புகையான் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது. பயிரில் சிம்பிற்கு ஒரு புகையான் பூச்சி இருந்தால், அந்த பயிர் குத்தில் ஒரு சிலந்தி இருக்கும்பட்சத்தில், பாதிப்பு நிலை இருக்காது. விளக்கு பொறி வைத்து அதிகமாக கவரப்படும் காலம் அறிந்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொருளாதார சேதநிலை அடைந்துவிட்டால், நீரை வடித்து, பயிரில் நல்ல காற்றோட்டம் ஏற்படுத்த வேண்டும். பட்டம் பிரித்து,

பூச்சிகொல்லி மருந்தான, குளோரிபை பாஸ், 500 மி.லி. அல்லது இமிடர்குளோபிரிட், 50 மி.லி. அல்லது தையோமெதாக்சிம், 50 கிராம் அல்லது பாஸ்போமிடான், 500 மில்லி என, ஒரு ஏக்கருக்கு, இவற்றில் ஏதேனும் ஒன்றை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, தூரின் அடிபாகத்தில் அடித்து, புகையான் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு தெரிவித்தார்.

## ரூ.12 லட்சம் மதிப்பில் விளைபொருட்கள் ஏலம்

கோபி : கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 12 லட்சம் ரூபாய்க்கு வாழைத்தார்கள் மற்றும் தேங்காய் ஏலத்தில் விற்பனையானது. கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், புதன் மற்றும் சனிக்கிழமைகளில், விளை பொருட்கள் ஏலம் நடக்கிறது.நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், மொத்தம், 10 ஆயிரம் வாழைத்தார்கள் வரத்தாகியது. கதளி ஒரு கிலோ, 30 ரூபாய்க்கும், நேந்திரம், 29 ரூபாய்க்கும் விலை போனது.செவ்வாழை தார், 720 ரூபாய்க்கும், ரொபஸ்டா, 400 ரூபாய், தேன்வாழை, 480, ரஸ்த்தாளி, 450 ரூபாய், மொந்தன், 300 ரூபாய், பூவன், 420 ரூபாய், பச்சைநாடான், 250 ரூபாய்க்கு விலை போனது.விற்பனைக்கு வந்த அனைத்து தார்களும், மொத்தம், 11 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. இதேபோல், தேங்காய்களுக்கான ஏலமும் நடந்தது. மொத்தம், 8,000 தேங்காய் வரத்தனது. ஒரு தேங்காய், 6.50 முதல் 14.80 ரூபாய் வரை விலை போனது.அனைத்து தேங்காய்களும், ஒரு லட்சத்துக்கு விற்பனையானது.

## தை பொங்கலை முன்னிட்டு கருப்பு கரும்பு விற்பனை துவக்கம்

சத்தியமங்கலம் : தை பொங்கலை முன்னிட்டு, சத்தியமங்கலம் பகுதியில் கருப்பு கரும்பு விற்பனை தொடங்கியது. தை பொங்கல் என்றாலே நினைவுக்கு வருவது, கருப்பு கரும்புதான். இந்த கரும்பை, குழந்தைகள் மட்டுமின்றி பெரியவர்களும் விரும்பி சாப்பிடுவர். தை பொங்கலை முன்னிட்டு, மூன்று நாளும், கரும்பு என்பது முக்கியதுவம் பெற்றதாகும். கருப்பு கரும்பு

பொங்கலுக்காகவே, பயிர் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. தை பொங்கலுக்கு இன்னும் ஓரிரு நாட்களே உள்ள நிலையில், சத்தியமங்கலம் பகுதியில், நேற்றே கருப்பு கரும்பு விற்பனை தொடங்கியுள்ளது. குழந்தைகள், தங்கள் பெற்றோரிடம் அடம் பிடித்து, ருசி அதிகம் உள்ள கருப்பு கரும்பை வாங்கி செல்கின்றனர். ஒரு கரும்பின் விலை, 20 முதல், 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. வாரச்சந்தை மட்டுமின்றி, நகர் பகுதியில் பார்க்கும் இடங்களில் எல்லாம் கரும்பு விற்பனை தொடங்கியுள்ளது.இன்னும் ஓரிரு நாளில், பல்வேறு இடங்களில் இருந்தும் கரும்பு வரத்து அதிகமாகும் என்பதால், அப்போது விலை குறைய வாய்ப்புள்ளதாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தேயிலையின் தரத்தை உயர்த்த பயிர் பாதுகாப்பு திட்டம்

குன்னூர் : நீலகிரி மாவட்டத்தில் தேயிலையின் தரத்தை உயர்த்தவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும் பயிர் பாதுகாப்பு திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. குன்னூரில் தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: கடந்த, 2014ம் ஆண்டு தேயிலை உற்பத்தியில் சிறிதளவு சரிவு இருந்தது. கடந்த ஆறு மாதமாக அரசியல் உட்பட பல்வேறு காரணங்களால் தேயிலை ஏற்றுமதி குறைந்திருந்தது. தற்போது, இந்த நிலை மாறி வருகிறது. தேயிலை தரத்தை உயர்த்தவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும் தென்னிந்தியாவில் பயிர் பாதுகாப்பு திட்டம் கடந்த,1ம் தேதியில் இருந்து தேயிலை வாரியம் அமல்படுத்தியுள்ளது. மருந்துகளை பயன்படுத்துவதில்லை என்ற உறுதிமொழியை விவசாயிகள் தொழிற்சாலைகளுக்கு வழங்க வேண்டும். உற்பத்தியாளர்கள் தரச்சான்றிதழ்களை ஏலம் விடும் மையங்களில் கொடுக்க வேண்டும். இந்த நடைமுறை ஏற்கனவே வட மாநில அளவில் செயல்படுத்தப் பட்டுள்ளதால், ஒரு சில இடங்களில் அளவை கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகிறது. பொதுவாக இறக்குமதி செய்யும் நாடுகள், சில வகை பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்திய தேயிலை தூளை வாங்குவதில்லை.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலையின் தரத்தை உயர்த்தவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும் இந்த பயிர் பாதுகாப்பு திட்டத்தை விவசாயிகளும், அனைத்து தொழிற்சாலைகளும் பின்பற்ற வேண்டும். இவ்வாறு, அம்பலவாணன் கூறினார்.

## <u>திருச்செங்கோட்டில் ரூ. 1.50 கோடிக்கு மஞ்சள் வர்த்தகம்</u>

திருச்செங்கோடு : திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 1.50 கோடி ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி, மஞ்சள், நிலக்கடலை, எள், ஆமணக்கு உள்ளிட்ட விவசாய உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யபடுகிறது. மஞ்சள் வகைகள், தர்மபுரி மாவட்டம் அரூர், பொம்முடி, ஈரோடு மாவட்டம் பவானி, அந்தியூர், சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, மேட்டூர், ஆத்தூர், தம்மம்பட்டி, மலையாளபட்டி, பெரம்பலூர், துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விற்பனை வருகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், விரலி ரகம், குவிண்டாலுக்கு, அதிகபட்சமாக, 9,899, குறைந்தபட்சமாக, 7,639 ரூபாய், கிழங்கு மஞ்சள், அதிகபட்சமாக, 8,699, குறைந்தபட்சமாக, 6,438 ரூபாய்க்கு ஏலம் போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சமாக, 12,689, குறைந்தபட்சமாக, 9,767 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தமாக, ஒரே நாளில், 2,500 குவிண்டால் மஞ்சள் விற்பனை ஆனதில், ஒரு கோடியே, 50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

தினகரன்

## இன்றையவேளாண்செய்திகள்

## விலையை கட்டுப்பாட்டில் வைக்க

## வெங்காயம், உருளைக்கிழங்கு 40 ஆயிரம் டன் கொள்முதல் : மத்திய அரசு அதிரடி நடவடிக்கை



புதுடெல்லி: விலையை கட்டுப்பாட்டில் வைக்க 25 ஆயிரம் டன் வெங்காயம், 15 ஆயிரம் டன் உருளைக்கிழங்கு கொள்முதல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக ரூ.50 கோடி சுழல் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. டெல்லியில் அடுத்தமாதம் சட்டமன்ற தேர்தல் நடக்கவுள்ள நிலையில் வெங்காயம் மற்றும் உருளை விலை அதிகரித்து பெரும் பிரச்னையை உருவாக்கி விடக்கூடாது என்பதில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது. அவற்றின் விலையை கட்டுப்பாட்டில் வைக்கவும் தேவையான இருப்பை வைக்கவும் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் மத்திய வேளாண்மை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர். வழக்கமாக ஜூலைநவம்பர் மாதங்களில் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு வரத்து குறைவாக இருக்கும். மேலும் இருப்பு வைக்க சாதமான சீதோஷ்ண நிலையும் இருக்காது. இதை கருத்தில் கொண்டு இப்போது முதலே வெங்காயம்உருளைக்கிழங்கை இருப்பு வைக்க இந்த நடவடிக்கை உதவியாக இருக்கும் என்று அதிகாரிகள் சுட்டிகாட்டினர். இதற்காக, அரசு அமைப்பான 'சிறு விவசாயிகள் வேளாண்வர்த்தக கூட்டமைப்பு' (எஸ்எப்ஏசி) இந்த கொள்முதல் பணியை மேற்கொண்டு தலைநகரில் இருப்பு வைக்கவும், ரூ.50 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது என்று வேளாண் அமைச்சகம் அறிவுறுத்துள்ளது. இந்த கூட்டமைப்பு அடுத்த மாதம் நேரடியாக விவசாயிகளிடம் இருந்து 25 ஆயிரம் டன் வெங்காயம், 15 ஆயிரம் டன் உருளைக்கிழங்கை கொள்முதல் செய்யும் பணியை தொடங்கும். இவற்றை இருப்பு வைக்கும் அதே நேரத்தில் பற்றாக்குறை ஏற்படும் என்று கருத்தப்படும் ஜூலைநவம்பர் மாதங்களில் வினியோகம் செய்து விலை கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்படும். ஊகத்தின் அடிப்படையில் வியாபாரம்

நடப்பதையும் தடுக்க முடியும் என்று அதிகாரிகள் கூறினர். காய்கறிகள் விலை 50 சதவீதம் அதிகரிப்பு: டெல்லியில் உள்ள காய்கறி மார்க்கெட்களில் தற்போது ஒரு கிலோ வெங்காயம் ரூ.25 க்கும், ஒரு கிலோ உருளைக்கிழங்கு ஸி10க்கும் விற்கப்படுகிறது. ஆனால், மற்ற காய்கறிகளின் விலை 50 சதவீதம் அளவிற்கு அதிகரித்து விற்கப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## அசைவ பிரியர்களுக்கான அயிரை மீன் சீசன் தொடங்கியது



செம்பட்டி: செம்பட்டி பகுதியில் குளங்கள் நிரம்பி மறுகால் செல்வதால் தற்போது அயிரை மீன்கள் அதிகளவு கிடைக்கின்றன. அயிரை ஒரு கிலோ ரூ.600 வரை விற்பனையாகிறது.திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி அருகே ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கம், புல்வெட்டி கண்மாய், நடுக்குளம், செங்குளம், மருதாணிக்குளம், ஆத்தூர் உள்ளிட்ட குளங்களில் நீர் நிரம்பி மறுகால் பாய்கிறது. இதனால் தற்போது அயிரை மீன் சீசன் துவங்கி உள்ளது. கட்லா, கெண்டை, குறவை மீன்கள் மார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.150 வரை விற்கப்படுகிறது. வாளை மற்றும் ஊளி மீன்கள் ஒரு கிலோ ரூ.300க்கு விற்கப்படுகிறது. ஆனால், அயிரை மீன்கள் எப்போதாவது கிடைக்கும் என்பதால், அந்த மீன்கள் ஒரு கிலோ ரூ.600க்கு விற்கப்படுகிறது. அவற்றை அசைவ பிரியர்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். இதுகுறித்து மீன் வியாபாரிகள் கூறுகையில், 'வருடத்திற்கு ஒரு மாதம் அயிரை மீன் கிடைக்கும். குளங்கள் மற்றும் ஏரிகளில் தண்ணீர் நிரம்பி, வாய்க்காலில் தண்ணீர் மறுகால் பாயும்போது அயிரை மீன்கள் அதிகம் கிடைக்கும். கடந்த வருடம் ஒரு கிலோ அயிரை மீன் ரூ.400 முதல் 500 வரை விற்றது. தற்போது ரூ.500 முதல் ரூ.600 வரை விற்கிறது' என்றனர்.

## திருப்பத்தூரில் பருத்தி ஏல விற்பனையை அமைச்சர் தொடங்கி வைத்தார்

நாட்றம்பள்ளி, : திருப்பத்தூர் தாலுகா வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் மூலம் பருத்தி ஏல விற்பனை நேற்று தொடங்கியது. அமைச்சர் கே.சி.வீரமணி துவக்கிவைத்தார். திருப்பத்தூர் பகுதியை சுற்றியுள்ள விவசாயிகள் விளைவிக்கும் பருத்தி வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு ஏலம் விடப்படுகிறது. கடந்த ஆண்டு ஒரு குவிண்டால் ரூ.8ஆயிரம் முதல் 9 ஆயிரம் வரை ஏலம் போனது. இந்த ஆண்டு தொடக்கம் முதலே விலை குறைந்து இருப்பதாலும், எனவே பருத்தி குறைந்த விலைக்கே ஏலம் போகும் எனவும் விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர். நேற்று நடந்த பருத்தி ஏலம் தொடக்க நிகழ்ச்சியில் அமைச்சர் கே.சி.வீரமணி கலந்துகொண்டு ஏலத்தை துவக்கி வைத்தார். உடன் திருப்பத்தூர் எம்எல்ஏ கே.ஜி.ரமேஷ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் லீலாசுப்பிரமணியம், திருப்பத்தூர் கூட்டுறவு விற்பனைசங்க தலைவர் பூபதி மற்றும் கூட்டுறவு சங்க நிர்வாகிகள் இதில் கலந்துகொண்டனர். முதல் நாளான நேற்று 30 குவிண்டால் பருத்தி ஏலம் போனது. முதல் ரகம் குவிண்டால் ரூ.5 ஆயிரம், 2வது ரகம் ரூ.4500க்கு ஏலம் போனது. வேலூர் மற்றும் திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட வெளி மாவட்டங்களில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்தனர். தொடர்ந்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் மூலம் ரூ. 64 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட தானியக் கிடங்கை அமைச்சர் கே.சி.வீரமணி பார்வையிட்டார்.

## கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு 50சதவீத மானிய விலையில் சூரியசக்தி மின் உலர்த்திகள்

கடலூர், : கடலூர் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் சூரிய சக்தி மின் உலர்த்திகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் சுரேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் 2014-15ம் ஆண்டில் வேளாண்மை

பொறியியல் துறை மூலம் சூரியசக்தி மின்உலர்த்திகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு வழங்கும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. ஒரு சூரிய சக்தி மின் உலர்த்திக்கான மானிய தொகை ரூ.2 லட்சம் அதிகபட்சமாக வழங்கப்படுகிறது. சூரிய சக்தியின் மின் உலர்த்திகள் பாலி கார்பனேட் கூரையை கொண்டது. இரண்டு முதல் மூன்று வரையிலான காற்று வெளியேற்று விசிறிகள் கொண்டது. பாலி கார்பனேட் கூரை பசுமை சூழல் தன்மை கொண்டது. ஏறத்தாழ 400 சதுர அடி பரப்பளவு கொண்ட சூரிய சக்தி மின் உலர்த்தியின் மூலம் வாழைப்பழம், தக்காளி, தேங்காய், மஞ்சள் மற்றும் மருத்துவ குணம் உடைய வேளாண் பொருட்களை உலர்த்த பயன்படுத்தி கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் அட்டவணை பழங்குடியின விவசாயிகள், சிறு மற்றும் குறு விவசாயிகள், பெண் விவசாயிகள் மற்றும் பொதுப் பிரிவினருக்கு திட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டு திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இத்திட்டம் குறித்து நேரிடையாக விவரம் அறிந்து கொள்ள கடலூர், சிதம்பரம், விருத்தாசலம் பகுதிகளில் உள்ள வேளாண் உதவி செயற்பொறியாளர்களை அணுகுமாறுகேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>பு.புளியம்பட்டி சந்தையில் கால்நடைக்கான கயிறு விற்பனை மும்முரம்</u>**

சத்தியமங்கலம், : பொங்கல் பண்டிகையை முன்னிட்டு புஞ்சைபுளியம்பட்டி வார சந்தையில் கால்நடைகளுக்கு தேவையான கயிறுகள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளது. 18 ஏக்கர் பரப்பளவில் உள்ள புஞ்சை புளியம்பட்டி நகராட்சி வார சந்தை பொள்ளாச்சிக்கு அடுத்த படியாக தமிழகத்தின் இரண்டாவது பெரிய சந்தையாகும். இங்கு வார நாட்களில் புதன்கிழமை மாட்டு சந்தையும், வியாழனன்று பொது சந்தையும் கூடுகிறது. இச்சந்தைக்கு புளியம்பட்டி சுற்று வட்டார கிராம மக்கள் மட்டுமின்றி சேவூர், அன்னூர், அவினாசி, நம்பியூர், சத்தியமங்கலம், பவானிசாகர், சிறுமுகை, மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து விவசாயிகள் அதிக அளவில் வருவது வழக்கம். மாட்டு பொங்கலன்று விவசாயிகள் வைத்துள்ள உழவு மாடு, கறவை மாடு, எருமை மாடு, ஆடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு பழைய

கயிறுகளை அகற்றி விட்டு புதிய கயிறுகள் கட்டி அழகு படுத்தி பொங்கல் வைத்து வழிபடுவது வழக்கம். பொங்கல் பண்டிகை நெருங்குவதால் சந்தைக்கு மாடுகளுக்கு தேவையான கயிறு வகைகள் மற்றும் கழுத்திற்கு கட்டப்படும் மணிகள் அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இது தவிர திருகாணி, மணிகள், சலங்கை, வளையம் உள்ளிட்ட பொருட்களும் விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டுள்ளது. கயிற்றின் விலை கடந்த ஆண்டை விட 20 சதவீதம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். அச்சு வெல்லம், பனை வெல்லம் உள்ளிட்ட பொருட்களும் விற்பனைக்கு வந்துள்ளது. பண்டிகைக்கு ஒரு வார காலம் உள்ளதால் கரும்பு விற்பனை மந்தமாக உள்ளதாக கரும்பு வியாபாரிகள் தெரிவித்தனர். பொங்கல் பானையின் விலை உயர்வினால் பானைகள் வாங்க பொதுமக்கள் வியாபாரிகளிடம் பேரம் பேசி வாங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

## அதிக மகசூல் பெற முளைப்புதிறன் பரிசோதனை செய்து விதைக்க வேண்டும் அதிகாரி தகவல்

புதுக்கோட்டை, : அதிக மகசூல் பெற நெல் விதைகளை முளைப்புதிறன் பரிசோதனை செய்து விதைக்க வேண்டும் என்று விதைச்சான்று இயக்குனர் கூறினார். புதுக்கோட்டை மாவட்டத்தில் நடந்து வரும் பல்வேறு விதை சான்றுத்துறை சம்மந்தமான பணிகளை விதைச்சான்று இயக்குநர் ராதாகிருஷ்ண் ஆய்வு செய்தார். எஸ்.குளவாய்ப்பட்டியில் உள்ள விவசாயி ராஜமாணிக்கம் வயலில் அமைக்கப்பட்டுள்ள ஜெஜிஎல் 1798 ரக நெல் விதைப்பண்ணையை விதைச்சான்று இயக்குனர் ராதாகிருஷ்ணன் ஆய்வு செய்து, புதிய வகை ரகங்களில் விதைப்பண்ணை அமைக்க அறிவுரை வழங்கினார். பின்னர் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய பல்வேறு விதை உற்பத்தி தொழில்நுட்ப கருத்துக்களையும் எடுத்துக் கூறினார். தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள பல்வேறு விதை விற்பனை மையங்களை ஆய்வு செய்தார். அப்போது, விதை விற்பனை நடைமுறைகள் பற்றியும் விதை தரம் பற்றியும், விதை ஆய்வு பற்றியும் எடுத்து கூறி, விற்பனை மையங்களில் பதிவேடுகள், விதை இருப்பு மற்றும் விற்பனைப் பட்டியல் ஆகியவற்றை ஆய்வு

செய்தார். பின்னர் விற்பனைக்கு வரும் அனைத்து விதைக்குவியல்களும் விதை ஆய்வாளர் அவர்களால் மாதிரி எடுக்கப்பட்டு தேறிய பின்புதான் விற்பனை செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தினார். இதேபோல திருக்கோகர்ணத்தில் இயங்கிவரும் புதுக்கோட்டை விதைப்பரிசோதனை நிலையப் பணிகளையும், விதைப்பரிசோதனை நிலையத்தில் பெறப்படும் சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் பணி விதை மாதிரிகள் முறைப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறதா? காப்பு விதை மாதிரி அறையில் உள்ள காப்பு விதை மாதிரிகள் முறையாக உரிய காலத்திற்கு பாதுகாக்கப் படுகிறதா?என்பதையும் ஆய்வு செய்தார். பின்னர் விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள விதைகளை விதைப்பு செய்வதற்கு முன் விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.30 கட்டணம் செலுத்தி முளைப்புத்திறன் பரிசோதனை செய்யும்படி கேட்டுக்கொண்டார். ஆய்வின்போது, புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜகான் மற்றும் விதை ஆய்வாளர்கள் உள்பட பலர் உடனிருந்தனர்.

## 70 பேருக்கு இலவச வெள்ளாடு

பாபநாசம், : தியாகசமுத்திரம் ஊராட்சியில் 70 பேருக்கு தமிழக அரசின் இலவச வெள்ளாடுகளை அமைச்சர் வைத்திலிங்கம் வழங்கினார். பாபநாசம் ஒன்றியம் கபிஸ்தலம் அருகே உள்ள தியாகசமுத்திரம் ஊராட்சியில் இலவச வெள்ளாடு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் நிர்மலா வரவேற்றார். 70 பேருக்கு இலவச வெள்ளாடுகளை அமைச்சர் வைத்திலிங்கம் வழங்கினார். நிகழ்ச்சியில் எம்எல்ஏக்கள் பாபநாசம் துரைக்கண்ணு, தஞ்சாவூர் ரங்கசாமி, பாபநாசம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் கோபிநாதன், துணைத்தலைவர் ஆனந்தி, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் மோகன், மாவட்ட கவுன்சிலர் மகேந்திரன், கால்நடை உதவி இயக்குனர்கள் ராஜியக்கொடி, நெடுஞ்செழியன், கால்நடை உதவி மருத்துவர்கள் வடிவேலன், செல்வகுமார், பாபநாசம் தாசில்தார் வாசுதேவன், கபிஸ்தலம் ஆர்ஐ சுந்தரச்செல்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கம்பம் பகுதியில் இயந்திரம்?மூலம்?சோளம்,?கம்பு?அறுவடை?பணி?தீவிரம்

கூடலூர், : கம்பம், கூடலூர் பகுதியில் இயந்திரம் மூலம் சோளம் மற்றும் கம்பு அறுவடைப்பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. கம்பம், கூடலூர் மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தை ஒட்டிய மானாவாரி நிலங்களில் சோளம், மற்றும் கம்பு பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. நான்குமாத பயிரான சோளம் இப்பகுதிகளில் தற்போது நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளது. கால்நடை தீவனமான சோளத்தை இயந்திரம் மூலம் அறுவடை செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கூலி ஆட்கள் பற்றாக்குறை என்ற காரணம் ஒருபுறம் என்றாலும், நேரத்தையும், செலவையும் கணக்கில் கொண்டு, இயந்திரம் மூலம் சோளம் அறுவடைப் பணியை தொடங்கி உள்ளனர். தற்போது கம்பம் மெட்டுச்சாலை பகுதியிலுள்ள மானாவாரி நிலங்களில் இயந்திர அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட சோளம் தற்போது குவிண்டால் ஒன்றுக்கு ரூ.950 முதல் ரூ.1050 வரை வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர். கடந்த ஆண்டைவிட சோளம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். இதுகுறித்து விவசாயி முருகன் கூறுகையில், கடந்த ஆண்டுவரை கூலி ஆட்கள் மூலம் அறுவடைசெய்து, டிராக்டர் மூலம் களத்துக்கு கொண்டு சென்று, கதிரடிக்கும் இயந்திரம் மூலம் சோளத்தை பிரித்தெடுக்க வேண்டும். அறுவடை இயந்திரம் வந்தபின்பு பணி சுலபமாகி விட்டது. ஒருமணி நேரத்தில் ஒரு ஏக்கர்வரை அறுவடை செய்யலாம். அறுவடையின் போதே இயந்திரம் தனியாக சோளத்தை பிரித்து தருகிறது. இதனால் விவசாயிகளுக்கு நேரம் மிச்சமாகிறது என்றார்.

## வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் மல்லி விளைச்சல் அமோகம்

சிவகாசி, : வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் மானாவாரி பயிராக சாகு படி செய்யப்பட்ட மல்லி செடிகள் நல்ல விளைச் சல் கண்டுள்ளது. இர ண்டு மாதத்தில் அறுவடை துவ ங்கவுள்ளதால் விவசாயிக ள் மகிஞ்ச்சியில் உள்ளனர்.

விருதுநகர் மாவட்டத்தில் இந்தாண்டு வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்தது. இதனால் விவ சாய பணிகள் தீவிரமடைந் தன. ஆனால் வெம்பக்கோ ட்டை ஒன்றிய பகுதிய¤ல் பருவமழை சரிவர பெய்யாததால் கண்மாய்களுக்கு நீர்வரத்து இல்லை. நில த்தடி நீர் மட்டமும் வெகுவாக குறைந்தது. இதனால் மானாவாரி நிலங்களில் நெல், பருத்தி போன்ற பயிர்களுக்கு மாற்றாக குறுகிய காலத்தில் விளை யக் கூடிய மல்லி செடிகளை ஏராளமா ன விவசாயிகள் பயிர் செய்தனர். வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள துலுக்கன்குறிச்சி, குகன்பாறை, நடு வப்பட்டி, சங்கரபாண்டியபுரம், செவல்பட்டி, கீழாண் மறைநாடு, சத்திரம், மேலான்மறைநாடு, சுப்பிரமணியபுரம் உள்ளிட்ட பல கிராமங்களில் சுமார் 600 ஏக்கருக்கு மேற்பட்ட மானாவாரி நிலங்களில் மல்லி செடிகளை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். ஒரு ஏக்கருக்கு 50 கிலோ மல்லி விதைக்கப்டுகிறது. விதைப்பதற்கு பயன்படும் மல்லி கிலோ ரூ.100க்கு விற்கப்படுகிறது. மல்லி செடிகள் விளைவதற்கு தண்ணீர் அதிகம் தேவைப்படாது. 3 மாதங்களுக்குள் செடிகள் வளர்ந்து அறுவடைக்கு தயாராகி விடும். ஒரு ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட நிலத்தில் சுமார் 300 முதல் 400 கிலோ வரை மல்லி விளைகிறது. கடந்த நவம்பர் மாதம் பயிர் செய்யப்பட்ட மல்லி செடிகள் தற்போது நன்கு விளைந்துள்ளது. இன்னும் இரண் டு மாதங்களில் அறுவடை க்கு தயாராகி விடும். மா னாவாரி நிலங்களில் மல்லி செடிகள் நல்ல விளைச்சல் அடைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயி வரதராஜ் கூறுகையில், வெம்பக்கோட்டை பகு தியில் பருவமழை இந்தா ண்டு சரிவர பெய்யவில்லை. இதனால் விவசாய பணிக ளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மானாவாரி நிலங்களில் ஏராளமான விவசாயிகள் மல்லி செடிகளை மாற்று பயிராக பயிர் செய்தனர். தற்போது அவை நல்ல விளைச்சல் அடைந்துள்ளது. மழை பொய்த்துவிட்ட போதிலும் மல்லி செடிகள் மூலம் ஓரளவு விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும் என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>தண்ணீரை அள்ளிக்கொடுக்கும் 'அதிசய கிணறுகள்'</u>



**வா**ன் மேகங்களின் கண்ணீராய் மண்ணில் முத்தமிடும் மழைச்சாரல் வீணாக வீதியில் விரைந்தோடாமல் பூமிக்குள் புகுந்தால்தான் நிலத்தடி நீர்வளம் பெருகும். பருவ மழை பொழியும் காலங்களில் பக்குவமாக மழைநீரை சேகரித்தால்தான் கோடை காலங்களில் நிலத்தடி நீர்மட்டம் இசைவு கொடுத்து நீரை வார்க்கும். அதற்காக கட்டிடங்களில் விழும் மழைநீர் பூமிக்குள் செல்வதற்கு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கிறார்கள். ஆனால் ஓடை, கால்வாய்கள் வழியாக பாய்ந்தோடும் உபரி நீர் பல சமயங்களில் பயன்படுத்தப் படாமல் வீணாகி போய்விடுகிறது. ஏரி, குளங்களை நோக்கி திசைதிருப்பி விட்டாலும் குறிப்பிட்ட கொள்ளளவு மட்டுமே தேக்கி வைக்க முடிகிறது. மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதால் அவை விரைவாக நிரம்பி விடுகின்றன. ஆனால் எவ்வளவு தண்ணீர் வந்தாலும் அப்படியே உள்வாங்கி பூமிக்குள் அனுப்பும் அதிசய வேலையை இரண்டு கிணறுகள் செய்கின்றன. “கிணறுகளில் என்ன அதிசயம் இருந்துவிடப் போகிறது?'' என்று கேட்கலாம். பொதுவாக பாசன கால்வாயில் 4 அல்லது 5 நாட்கள் தொடர்ந்து தண்ணீர் வந்தால், பெரிய பரப்பிலான குளம் கூட நிரம்பி விடும். ஆனால், கால்வாய் தண்ணீரை ஒரு மாத காலம் திருப்பி விட்டாலும், இந்த அதிசய கிணறுகள் மட்டும் நிரம்புவது இல்லை. குற்றால அருவிபோல் கொட்டும் கால்வாய் தண்ணீரை அப்படியே உள்வாங்கி நிலத்தடிக்குள் அனுப்பி வைத்து, நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கும் வேலையை இந்த கிணறுகள் செய்கின்றன. இன்னும் ரத்தின சுருக்கமாக கூறுவது என்றால், கிணறு வடிவிலான

‘குட்டிக்கடல்’ என்றும் சொல்லலாம். நெல்லை மாவட்டம் ராதாபுரம் தாலுகா திசையன்விளை அருகே முதுமொத்தன்மொழி கிராமம் ஆயன்குளம் படுகை பகுதியில்தான், இந்த 2 கிணறுகளும் உள்ளன. இந்த கிணறுகள் சுமார் 100 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானவை. சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு அந்த பகுதியில் கடும் வறட்சி நிலவியதால், போதிய அளவில் தண்ணீர் இல்லை. எனவே கிணற்றை ஆழப்படுத்தினார்கள். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. கிணற்றில் இருந்த தண்ணீரை அப்படியே பூமி உள்வாங்கிக் கொண்டதை அறிந்தார்கள். அதன் பின்பு மழை எவ்வளவுதான் பெய்தாலும், அக்கம்பக்கத்தில் இருந்து காட்டு வெள்ளம் கிணற்றில் விழுந்தாலும், அந்த தண்ணீர் எங்கே போகிறது என்ற சுவடே தெரியாமல் கிணறு உள்வாங்கிக் கொண்டது. இத்தனைக்கும் கிணறுகளுக்குள் ஆழ்துளை எதுவும் அமைக்கப் படவில்லை. அதன் பின்பு ஆயன்குளம் படுகையில் இருந்து, அந்த கிணறுகளுக்கு தனிக்கால்வாய்கள் அமைத்து, தண்ணீர் திறந்துவிட்டார்கள். கால்வாயில் மாதக்கணக்கில் தொடர்ந்து தண்ணீர் வந்து விழுந்தாலும், இந்த கிணறுகள் நிரம்பவில்லை. இந்த கிணறுகள்தான் நிரம்பவில்லையே தவிர; அக்கம்பக்கத்தில் உள்ள கிணறுகளில் வழக்கமாக இருக்கும் நீர்மட்டத்தைவிட மேலும் 10 அடி வரை தண்ணீர் உயர்ந்து இருந்தது. இதே போல் சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் மட்டம் உயரத் தொடங்கியது. நிலத்தடி தண்ணீரில் இருந்த உப்புத்தன்மையும் கொஞ்சம், கொஞ்சமாக மாறியது. இந்த அதிசய கிணறுகள் பற்றி ராதாபுரம், திசையன்விளை பகுதிகளில் பரவலாக பேசப்பட்டு வருகிறது. 1989–ம் ஆண்டில் நெல்லை மாவட்ட கலெக்டராக இருந்த ராஜரத்தினம் இந்த கிணறுகளை கொண்டு நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்க அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்தார். பின்னர் மணிமுத்தாறு அணையில் இருந்து 4–வது ரீச் மூலம் உபரி தண்ணீர் திறந்து விடப்பட்டு, பிரத்தியேக கால்வாய் மூலம் இந்த கிணறுகளுக்கு கொண்டு செல்லப்பட்டது. 3 மாதங்களுக்கு இவ்வாறு தண்ணீர் திறக்கப்பட்டது. அதன்பின்பு 1990–ம் ஆண்டிலும் தண்ணீர் திறக்கப்பட்டது.



நெல்லை மாவட்ட கலெக்டராக கோ.பிரகாஷ் பணியாற்றிய போதும், மணிமுத்தாறு அணையின் 4–வது ரீச் மூலம் தண்ணீர் திறக்க ஏற்பாடு செய்தார். சில ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு கடந்த ஆண்டில் நன்றாக மழை பெய்து இருப்பதால், அதிசய கிணறுகளுக்கு சுமார் 45 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. குட்டிக் கடல் நிரம்பவே இல்லை. இதுபற்றி அதிசய கிணற்றின் உரிமையாளர் சண்முகவேல் பாண்டியன் சொல்கிறார். ''கால்வாய் மூலம் இந்த கிணறுகளுக்கு தொடர்ந்து தண்ணீர் விழுந்தால், சுற்றுவட்டாரத்தில் சுமார் 10 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள அனைத்து கிணறுகளிலும் நீர்மட்டம் நன்றாக உயருகிறது. முன்பு ஒரு முறை கிணற்றில் விழுந்த தண்ணீருடன், கழுத்தில் அணியக்கூடிய பாசிமணிகளை கொட்டி சோதனை செய்தோம். அடுத்த ஒன்றிரண்டு நாட்களில் தேரிக்காட்டில், உவரி காரிகோவில் பம்புசெட் கிணற்றில், அந்த பாசிமணிகள் மிதந்தன. எனவே இந்த கிணற்றில் விழும் தண்ணீரானது, நிலத்தடி நீராக ஓடி பல இடங்களுக்கு செல்கிறது என்பதை அறிந்தோம். நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் வறட்சியான பகுதிகளுக்காக வெள்ளநீர் கால்வாய் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ரூ.369 கோடியில் நிறைவேற்றப்படும் அந்த திட்டத்தில், இந்த அதிசய கிணறுகளும் இணைக்கப்பட்டு உள்ளன. அதற்காக ஒரு ஏக்கர் நிலத்தை அரசுக்கு கொடுத்து இருக்கிறேன்'' என்கிறார். கடந்த 2 ஆண்டுகளாக கடும் வறட்சியை சந்தித்த நெல்லை மாவட்டத்தில், இப்போது பட்டிதொட்டி எல்லாம் விவசாய பணிகள் மும்முரமாக நடக்கின்றன. பச்சை பசேல் காட்சியை காண முடிகிறது. பொதிகை மலை தென்றல் காற்றுடன் நெற்பயிர்கள் தலையசைத்து கொஞ்சி விளையாடுகின்றன. நீர்நிலைகள் நிரம்பி இருப்பதாலும், ஆற்று வெள்ளம் ஆர்ப்பரித்து ஓடுவதாலும், விவசாயிகளின் மனதில் மகிழ்ச்சியை மழை வரவழைத்து இருக்கிறது. நெல்லை மாவட்டத்தில்

பொதுவாக ராதாபுரம் தாலுகா வறட்சி அதிகமாக காணக்கூடிய பகுதி. இந்த தாலுகாவின் பெரும்பாலான பகுதிகள் கடற்கரை ஓரத்தில் உள்ளன. வறட்சி காலத்தில் கடல் நீரானது, நிலத்தின் உள்ளே உட்புகுந்து நிலத்தடி நீரை உப்புத் தன்மையாக்கி விடுகிறது. மழை நன்றாக பெய்து, குளங்கள் நிரம்பினால் மட்டுமே அந்த உப்புத்தன்மை என்பது கொஞ்சம், கொஞ்சமாக மாறும். இவ்வாறு உப்புத்தன்மை ஏற்படாமல் தடுக்க இந்த அதிசய கிணறுகள் கைகொடுக்கின்றன. தற்போது நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் இந்த கிணறுகளை பற்றி விவசாயிகள் பரவலாக பேசிக் கொள்கிறார்கள். அதிசய கிணறு பற்றி முதுமொத்தன்மொழி கிராமத்தை சேர்ந்த விவசாயி சகாதேவன் கூறுகையில், ‘‘எனக்கு இந்த பகுதியில் சுமார் 10 ஏக்கர் நிலம் உள்ளது. கிணற்று பாசனம் மூலம் விவசாயம் செய்கிறேன். அந்த அதிசய கிணற்றுக்கு தண்ணீர் விழும் காலங்களில், என்னுடைய கிணற்றில் தானாகவே நீர்மட்டம் உயர்ந்து விடுகிறது. அந்த கிணற்றில் விழும் தண்ணீரானது, உவரி, குட்டம், இடையன்குடி, வெம்மணங்குடி, குண்டல், காரி கோவில், செம்பொன்விளை, மரக்காட்டுவளை ஆகிய பகுதிகளுக்கு நிலத்தடி நீராக செல்கிறது. இதனால் நிலத்தடி நீரில் உள்ள உப்புத்தன்மை மாறுகிறது. குடிநீர் பிரச்சினையும் தீர்கிறது. எனவே ஆண்டுதோறும் மணிமுத்தாறு அணையில் இருந்து குறிப்பிட்ட அளவு தண்ணீரை, இந்த கிணறுகளுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்மூலம் எங்கள் பகுதி நிலத்தடி நீர்வளம் பாதுகாக்கப்படும்’’ என்கிறார்.

## ரூ.2 கோடிக்கு மஞ்சள் ஏலம்



திருச்செங்கோட்டில் 3,500 மூட்டை மஞ்சள் ரூ.2 கோடியே 5 லட்சத்துக்கு ஏலம் போனது.

மஞ்சள்ஏலம்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்முடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய இடங்களில் இருந்து விவசாயிகள் 3,500 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் இருந்து 35-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்து இருந்தனர்.

ரூ.2கோடிக்குவிற்பனை

இந்த ஏலத்தில் விராலி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.7 ஆயிரத்து 639 முதல் ரூ.9 ஆயிரத்து 899 வரையும், கிழங்கு ரகம் ரூ.6 ஆயிரத்து 438 முதல் ரூ.8 ஆயிரத்து 699 வரையும், பனங்காளி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.9 ஆயிரத்து 430 முதல் ரூ.12 ஆயிரத்து 689 வரையும் விற்பனை செய்யப்பட்டது. மொத்தம் 3,500 மூட்டை மஞ்சள் ரூ.2 கோடியே 5 லட்சத்துக்கு ஏலம் போனதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர். இதுவே இது வரை நடைபெற்ற ஏலத்தில் அதிகபட்சத்தொகை என்பது குறிப்பிடதக்கது.

## குன்னூர் ஏல மையத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனை



குன்னூர் ஏல மையத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

தேயிலைஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்து வருகின்ற னர்.விற்பனை எண் 2-க்கான ஏலம் கடந்த 8, 9

ஆகிய தேதி களில் நடைபெற்றது. மொத் தம் 16 லட்சத்து 91 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலத் துக்கு வந்தது. இதில், 11 லட் சத்து 93ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 98ஆயி ரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

82சதவீததேயிலைதூள்விற்பனை

இந்த ஏலத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனை யானது. விற்பனையான அனைத்து தேயிலை தூள் களும் 1 ரூபாய் விலை ஏற்றம் இருந்தது. சி.டி.சி. தேயிலை தூளின் அதிகபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு 219 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் கிலோவுக்கு 265 ரூபாய் என அதிகபட்ச விலையாக ஏலம் சென்றது. சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதா ரண வகை கிலோ ஒன்றுக்கு 40 ரூபாயில் இருந்து 44 ரூபாய் வரையிலும், முதல் ரகதேயிலை தூள் கிலோவுக்கு 90 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரக தேயிலை தூள் டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை கிலோவுக்கு 45 ரூபாயில் இருந்து 54 ரூபாய் வரையிலும், முதல் ரகதேயிலை தூள் கிலோவுக்கு 110 ரூபாயில் இருந்து 190 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 3-க்கான ஏலம் வருகிற 15, 16 ஆகிய தேதிகளில் நடக்கிறது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து 12 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 1½ லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணி தீவிரம்



குன்னூர் சிம்ஸ் பூங்கா வில் 1½ லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது.

சிம்ஸ் பூங்கா

குன்னூர் நகரில் முக்கிய சுற் றுலா தலமாக தோட்டக்கலைத் துறைக்கு சொந்தமான சிம்ஸ் பூங்கா உள்ளது. சிம்ஸ் பூங்கா சுமார் 30 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்து விரிந்து உள்ளது.ஆண்டு தோறும் கோடை சீச னுக்காக

பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்யப் படும். இதன்படி இந்த ஆண்டு கோடை சீசனுக்காக 1½ லட் சம் மலர் நாற்றுகள் நடவுசெய் யும் பணி நேற்று தொடங்கியது. இந்த பணியை உதவி தோட்டக் கலை இயக்குனர் டாக்டர் ராம்சுந்தர் தொடங்கி வைத் தார். பின்னர் இதுகுறித்து அவர் கூறியதாவது:-

1½ லட்சம் மலர் செடிகள்

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் செடிகள் நடவு செய்யும் பணி கடந்த சில தினங்களுக்கு முன்பு தொடங்கியது. தற்போது குன் னூரில் உள்ள சிம்ஸ் பூங்காவில் 1½ லட்சம் மலர் செடிகள்நடவு செய்யும் பணி தற்போது தொடங்கப் பட்டு உள்ளது. சிம்ஸ் பூங்காவில் நடவு செய் வதற்காக நெதர்லாந்து நாட் டில் இருந்து ஆலியாக், சால் வியா, டேலியா, சிம்யா, காஸ் மோஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான மலர் நாற்றுக்கள் கொண்டு வரப்பட்டு உள் ளன. சிம்ஸ் பூங்காவில் தற்போது நடவு செய்து உள்ள செடிகளில் மலர்கள் பூத்து குலுங்கதொடங் கியதும் சுற்றுலா பயணிகள் பார்வைக்காக பூங்காவில் உள்ள மலர் மாடத்தில் அடுக்கி வைக்கப்படும். இவ்வாறுஅவர் கூறினார். அப்போது சிம்ஸ் பூங்கா மேலாளர் மூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர் தியாகராஜன் உள்பட ஏரா ளமானோர் உடன் இருந்தனர்.

## <u>திருமூர்த்தி அணையில் இருந்து தண்ணீர் திறப்பு 94 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்</u>



உடுமலையை அடுத்துள்ள திருமூர்த்தி அணையில் இருந்து பி.ஏ.பி. 3–ம் மண்டல பாசனத்திற்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன்மூலம் 94 ஆயிரத்து 362 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## பி.ஏ.பி. பாசனம்

உடுமலையை அடுத்த திருமூர்த்தி அணைக்கு பரம்பிக்குளம்–ஆழியாறு பாசன திட்டத்தின் கீழ்(பி.ஏ.பி) பரம்பிக்குளம் அணையில் இருந்து காண்டூர் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டு பின்னர் அங்கிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த பி.ஏ.பி.பாசன திட்டம் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு 6 மாதங்களுக்கு ஒரு மண்டலம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த 6 மாதத்திற்குள் 135 நாட்களை மண்டல பாசன காலமாக கொண்டு உரிய இடைவெளி விட்டு 90 நாட்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த பி.ஏ.பி.பாசன திட்டத்தில் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் முதல் மண்டல பாசனத்தில் 94 ஆயிரத்து 521 ஏக்கர் நிலமும், 2–வது மண்டல பாசனத்தில் 94 ஆயிரத்து 201 ஏக்கர் நிலமும், 3–வது மண்டல பாசனத்தில் 94 ஆயிரத்து 362 ஏக்கர் நிலமும், 4–வது மண்டல பாசனத்தில் 94 ஆயிரத்து 68 ஏக்கர் நிலமும் ஆக மொத்தம் 3 லட்சத்து 77 ஆயிரத்து 152 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது.

## தண்ணீர் திறப்பு

இந்த திட்டத்தின் 2–வது மண்டல பாசனத்திற்கு கடந்த செப்டம்பர் மாதம் 7–ந்தேதி 3 சுற்றுகளாக தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்தநிலையில் 3–ம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதனை தொடர்ந்து தமிழக முதல்–அமைச்சர் உத்தரவின்படி திருமூர்த்தி அணையில் இருந்து 3–வது மண்டல பாசனத்திற்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன், சட்டசபை துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன், கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பொத்தானை அழுத்தி தண்ணீரை திறந்து விட்டனர்.

நீர்மட்டம்

திருமூர்த்தி அணையில் மொத்த உயரம் 60 அடி. நேற்று அணையின் நீர்மட்ட உயரம் 58.04 அடியாக இருந்தது. பிரதான கால்வாயில் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 1037 கன அடி தண்ணீர் திறந்து விடப்படும். இந்த தண்ணீர் தொடர்ந்து 17 நாட்களுக்கு திறந்து விடப்படும். பின்னர் தகுந்த இடைவெளிக்கு பின் தேவையான அளவு தண்ணீர் திறக்கப்படும். இதன்மூலம் மொத்தம் 94 ஆயிரத்து 362 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். திருமூர்த்தி அணையில் இருந்து நேற்று 3–ம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் பி.ஏ.பி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## குண்டடம் அருகே ஒரே மக்காச்சோள தட்டையில் 7 கதிர்கள் விளைந்த அதிசயம்



குண்டட அடுத்துள்ள சந்திராபுரத்தை சேர்ந்தவர் பாலு (வயது 40). விவசாயி. இவர் தனது தோட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ளார். தற்போது கதிர்கள் விட்டு விளையும் தருவாயில் உள்ளது. இதில் உள்ள ஒரு தட்டையில் மட்டும் வழக்கத்திற்கு மாறாக 7 கதிர்கள் விளைந்துள்ளது. மேலும் 5 கதிர்கள் பெரிய அளவில் உள்ளதோடு, மணிகளும் அதிகளவில் உள்ளன. இதுபற்றி அவர் கூறும்போது, வழக்கமாக மக்காச்சோளம் ஒருதட்டையில் ஒரு கதிர் மட்டுமே விளையும். சில தட்டுகளில் இரண்டு கதிர்கள் விளைவதுண்டு. அவ்வாறு 2 கதிர்கள் விட்டால் அதில் ஒன்றில் மணிகள் இருக்காது. ஆனால்

ஒரே தட்டையில் 7 கதிர்கள் விட்டு அதில் 5 கதிரில் மணிகள் இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.